IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# தொன்ம மறுவாசிப்பில் உருப்பெறும் மீள்கதையாடல்கள் - காலனிய நீக்கமும் புனைவின் அரசியலும்

ஞா.சத்தீஸ்வரன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
விசுவபாரதி நடுவண் பல்கலைக்கழகம்
சாந்திநிகேதன் – 731235
மேற்குவங்காளம்.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

காலனிய நாடுகள் அரசியல் தளத்தில் விடுதலை பெற்றபின்னரும் பண்பாட்டுத்தளத்தில் அவற்றின் அடிமைத் தளை தொடர்கிறது. இதனைக் களைந்திட பின்காலனியக் கருத்தியல்கள் முயல்கின்றன. இந்தியத் துணைக்கண்டத்தில் ஐரோப்பிய காலனியத்துடன் ஆரியக் காலனியமும் தொடர்ந்து வருவதை ஆய்வாளர்கள் எடுத்துரைக்கின்றனர். மல்லிகா சென்குப்தாவால் வங்காள மொழியில் எழுதப்பெற்ற சீதாயணம் என்னும் புதினத்தில் இந்தக் காலனிய நீக்கச் செயல்பாடு தொழிற்படும் முறைமையை இக்கட்டுரை ஆராய்கிறது. ஆரியக் காலனியத்தின் நிறுவனத் தளமாக இராமராஜ்ஜியம் இயங்குவதையும் பெண்கள், பூர்வகுடிகள், இயற்கை உள்ளிட்ட விளிம்புநிலை தன்னிலைகளை, ஆண்மைய அரசதிகார ஆதிக்கத் தன்னிலைகள் ஒடுக்குவதை வெளிக்காட்டுவதாக சீதாயணம் பிரதி அமைகிறது.

**குறிச்சொற்கள் – சீதாயணம், பின்காலனியம், தொன்மம், தொன்ம மறுவாசிப்பு, காலனிய நீக்கம்.**

**முன்னுரை:**

மொழி வெறும் கருத்தியல் பரிமாற்றத்திற்கான பொருள்தளம் மட்டுமன்று. ஓர் இனக்குழுச் சமூகத்தின் உள்ளமை அடுக்கின் பிரிக்க இயலாத பகுநிலைக்கூறாக இயங்கப்பெறுவது. அதிகாரமும், அதன் பொருளுற்பத்தியும் மொழியினூடாகவே நிலைபேறாக்கம் பெறுகிறது. எனவேதான் மூன்றாம் உலக நாடுகள் அனைத்தும் நேரடி அரசியல் தளத்தில் காலனிய விடுதலை பெற்றிருந்தாலும், பண்பாட்டு அகவயப் பின்னணியில் கல்வி, மொழி ஆகிய கூறுகளில் இன்னும் நவீன காலனிய அடிமைத்தனத்துக்குள் இருந்து வருகின்றன. கீழைத்தேயம் குறித்தான மேற்குலகின் பார்வை இங்கு கவனிக்கத்தக்கது. இந்தியச் சூழலில் ஐரோப்பியக் காலனியாதிக்கத்தின் வேலையை வெகுமுன்னமே ஆரியக் காலனியம் கைக்கொண்டிருந்தது எனலாம்.

காலனியாதிக்கம் விளைவித்த இக்கருத்தியல்களை பின் காலனித்துவக் கோட்பாடு தகர்க்கிறது. மொழி எவ்வாறு அடையாள உருவாக்கத்தில் ஈடுபடுகிறது என்பதையறிந்து மொழித்தளத்தில் படிந்துள்ள காலனியப் பிரக்ஞையை சிதறடிக்கிறது. மரபு மீட்டுருவாக்கம் மற்றும் மேலாதிக்க எதிர்ப்பின்வழி காலனித்துவ மொழியைக் கைப்பற்றி, காலனிய நீக்க முயற்சியில் களமிறங்குகிறது. பண்பாட்டு மீட்டெடுப்பாக பழமையை முன்னெடுக்காமல், காலம் காலமாக மனித மன அடுக்குகளின் ஆழ் மையங்களில் வலியத் திணித்திருந்த பண்பாட்டுக் கீழ்ப்படிதலைக் கேள்வியெழுப்பிக் கலகம் செய்கிறது. பின்காலனித்துவம் குறித்து கோட்பாட்டாளர்களிடையே வெவ்வேறு கருத்தியல்போக்கு காணப்படுகிறது. எனினும் காலத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் காலனித்துவத்தை எதிர்த்தல், காலனித்துவச் சிந்தனைகளிலிருந்து விடுபடல், காலனியாதிக்கத்திற்குட்பட்டோர் தமக்குரிய இடத்தைப் பெறுதல் எனும் பொருளிலேயே பெரும்பான்மைப் பயன்படுத்தப்படுவதாக பேராசிரியர் தி.சு.நடராஜன் கூறுகிறார். (தமிழில் திறனாய்வுப் பனுவல்கள், பக்.452)

காலனிய எதிர்ப்பு அரசியலில் முக்கியமானது பண்பாட்டுத் தளத்தில் மொழியின் பயன்பாட்டாக்கம். நாட்டுப்புறப் பாடல்களாகவும், வழக்காறுகளாகவும், தொன்மங்களாகவும் தங்களது சொந்தப் பண்பாட்டை மீண்டும் எழுதுவதன்வழி தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திக்கொள்வது. ஆனால் இவை காலனிய எதிர்ப்பு எனும் ஒற்றைப் புள்ளியில் தட்டையாகப் புரிந்துகொள்ளப்பட்டு, அதிகாரத் திறப்புக்கான இடைவெளியை மீண்டும் விட்டுச்செல்லுமானால், அவை வெறுமனே அதிகாரக் கைமாற்றமாய், ஒடுக்குமுறைகளின் பழைய வடிவத்தைத் தூக்கிப் பிடிக்கும் வலதுசாரிப் பின்காலனியமாய் நின்றுவிடக்கூடும். அவ்வாறன்றி ஆரியப் பண்பாட்டுக் காலனியாதிக்கத்தால் நிலைநிறுத்தப்பட்ட பார்ப்பனிய அரசியலை, அது உருவாக்கி வைத்திருக்கும் அதிகார நிறுவனங்களை, அந்நிலையாக்கக் கூறுகளைக் கொண்டே தகர்த்தெறிந்துள்ளார் மல்லிகா சென்குப்தா. புராணங்களும், தொன்மங்களும் ஆணாதிக்கப் பார்ப்பனிய அரசியலைக் கொண்டுசெல்லவும், அவற்றை நிலைப்படுத்தவும் துணைசெய்யக் கைக்கொள்ளப்பட்டவை. இராமாயணம், மகாபாரதத்தின் பங்கு அவற்றுள் முக்கியமானவை.

இதனைக் கையிலெடுத்துக்கொண்டு, ஆரியக் காலனியம் கட்டிவைத்திருக்கும் ஒற்றைப் பண்பாட்டிற்கு எதிராகப் பண்பாட்டுப் பன்மையியத்தையும், எதிர் மதிப்பீடுகளையும், புதிய கதையாடல்களையும் தொன்ம மறுவாசிப்பில் முன்வைக்கும் சீதாயணம் புதினத்தைப் பின்காலனிய நோக்கிலிருந்து அணுகுகிறது இக்கட்டுரை.

**மல்லிகா சென்குப்தாவின் சீதாயணம்:**

மல்லிகா சென்குப்தாவால் சீதையை முதன்மைப் பாத்திரமாகக்கொண்டு இராமயாணத்தை மறுவாசிப்பு செய்து புனையப்பட்ட தொன்ம மறுவாசிப்புப் புதினம் சீதாயணம். வால்மீகி இராமாயணத்தின் உத்தர காண்டத்தை மட்டும் மையமாகக்கொண்டு கற்பு, பண்பாடு எனும் சொற்கூட்டுக்குள் இலாவகமாக மறைந்திருக்கும் ஆணாதிக்கப் பார்ப்பனிய அரசியலையும் அதன் அத்தனை ஒடுக்குமுறைகளையும், இராமராஜ்ஜியம் எனும் பெயரில் பழங்குடிகளையும், பெண்களையும், இயற்கையையும் கையகப்படுத்தும் நுண்ணரசியலையும் தோலுரித்துக் காட்டும் புரட்சிப் பெண்ணாக சீதையை மறுகட்டமைப்பு செய்வதாக புனைவாக்கம் பெற்றுள்ளது இப்புதினம். இம்மைய ஓட்டத்தை கடத்திச் செல்லும் பிரதியின் புனைவு மொழியானது காலனிய மொழியதிகாரத்தைச் சிதைவுக்குள்ளாக்கும் எதிர் சொல்லாடல்களின் தன்னிலைகளாக உருப்பெற்றுள்ளதைப் பின்காலனித்துவ நோக்கின் பன்முக வாசிப்பின்வழி அறிய முடிகிறது.

**காலனிய ஒற்றையதிகாரம்- பெருந்தேசமெனும் கருத்தாக்கம்:**

தேசம், பெருந்தேசமெனும் கருத்தாக்கங்கள் காலனியத்தின் மிக முக்கியமான கதையாடல்களாகும். இவை ஒட்டுமொத்த நிலப்பரப்பின் பல்புவியியல் பண்பாட்டுத் தன்மையை, அதன் பல்தரப்பட்ட வகைமாதிரியை அழித்து அனைத்துக்குமான ஒற்றை மாதிரியை முன்வைக்கின்றன. இவை ஆரியக் காலனியத்தின் அரசதிகாரத்துக்கு எந்த அளவுக்கு முதன்மையானது என்பதை இராமனின் கூற்றாகவே சீதாயணம் இப்படிக் குறிப்பிடுகிறது, “அரசு ஒரு தந்திரோபாயம். சத்திரிய அதிகாரத்தின் இரகசிய ஆதாரம். இந்த அமைப்பு கட்டமைக்கப்பட்டதால்தான் சாதாரண மக்கள் மன்னனுக்குக் கட்டுப்பட்டு வரி செலுத்துகின்றனர்… சீதை ஒரு சாதாரண பெண். அந்த ஒரு பெண்ணிற்காக மூதாதையர்கள் கட்டியெழுப்பிய இந்த தேசத்தை அழித்தொழிக்க முடியுமா… அரசு இருப்பதானாலேயே இவையனைத்தும் இருக்கின்றன”. (சீதாயணம், 2024) இந்த ஆரியக் காலனியத்தை ஏற்றுக்கொள்ளாத காட்டுவாசிகளான அனார்யப் பழங்குடிகள் மீதான காரணமற்ற வன்முறைகளுக்கும் இதுவே காரணமாகிறது. அனார்யர்களை அழிப்பதே சத்திரிய குணம் என்று கூறும் வால்மீகியிடம், அதனை ‘வன்முறை’ என்று வாதிடும் சீதை “அந்த வன்முறை தவிர்க்க முடியாததாக இருக்கவில்லை. அனார்ய மக்கள் காலங்காலமாக ஆரண்யபூமியில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அந்த ஆரண்யத்தின் இங்குதி, நெல்லி, வில்வம்பழங்களை உண்டு அவர்களின் முன்னோர்கள் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களும் அந்தப் பழங்களுக்கு உரிமை உடையவர்களே.

வனத்தின் உரிமையை அவர்கள் இழக்க விரும்பவில்லையென்றால் அவர்களைக் குற்றம் சொல்ல முடியுமா…” என்று ஆரிய ஒற்றையதிகாரப் போக்கைக் கேள்வியெழுப்புகிறாள்.

காலனியத்தின் இத்தகு தேசியக் கருத்தாடல்களை நிலைபெறச் செய்வதற்காக சில விதிமுறை அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. அதனை ஏற்றுக்கொண்டு புதிதான இந்தக் காலனியக் கட்டமைப்புகளுக்கு ஏற்றதான தன்னிலைகளாக மனிதத் தன்னிலைகள் உருமாற்றம் செய்யப்படுகின்றனர். சீதாயணத்தில் இயங்குகின்ற பார்ப்பனியத்தின் விதிமுறைகளை இந்தக் கோணத்தில் காணமுடிகிறது.

**காலனிய அந்நியமாதல்:**

”ஒழுங்கு செய்பவர்களாக ஐரோப்பியர்களும் ஒழுங்குக்குள் வருபவர்களாக காலனிய மக்களும் உருவான நிலையில் காலனியம் அந்நியமாதல் பண்புகளைக் குடிமக்களிடம் உற்பத்தி செய்கிறது” எனும் கருத்தியல் தொடர்ந்து பேசப்படுகிறது. (திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும், 2016) சீதாயணத்தில் இனக்குழுச் சமூகமாக வேட்டையாடி வாழும் பூர்வ குடிகளான பழங்குடி மக்கள் காலனியத்தின் அதிகார அமைப்புக்குள் வலுக்கட்டாயமாக நுழைக்கப்படுகையில் அங்கு ’அந்நியமாதல்’ தோற்றம் கொள்வதையும், அவ்வகையில் முந்தைய அமைப்பு முறைகளிலிருந்து தலைகீழாக்கம் செய்யப்படும்போது நிலவும் முரண் நிலைகளையும் காணமுடியும்.

“பழைய கற்சிலை தெய்வங்களுக்குப் பதிலாக அவர்கள் வைதீக தெய்வங்களுக்கு அடிபணிந்துவிட்டனர். முன்பு அவர்கள் காட்டுச் சிறுத்தையை சமாதானம் செய்வதற்காக பலவித பலி பொருட்களைப் படைத்து மந்திரங்களை உச்சரிப்பர்; இப்போது ஆரியர்களைப் போலவே பசுக்களைத் தாயாகக் கருதி வணங்குகின்றனர். வனத்தின் பழங்கள், கிழங்குகள் மற்றும் விலங்கு இறைச்சிகளைச் சேகரிப்பதில் நாள் முழுவதையும் செலவிடுவதற்குப் பதிலாக அவர்கள் பல்வேறு சூத்திரத் தொழில்களுக்குப் பழகிவிட்டனர். சிலர் முடிதிருத்தும் பணியில் ஈடுபட்டனர். தபோவனத்தில் வசிக்கும் பிராமணர்களுக்கும், ஊர்களில் வசிக்கும் வைசியர்களுக்கும் சேவை செய்கின்றனர்” என்று புதினத்தில் குறிப்பிடுவதன்வழியும், பிராமணர்களுக்கு செருப்பு தைத்துக்கொடுத்து கழிவுகளை அகற்றும் தொழிலைச் செய்ய முடியாது எனும் சம்புகனின் எதிர்ப்புணர்விலிருந்தும், ஆரிய வன்முறைகளிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக ஹிரண்யகர்ப்பத்தை ஏற்றுக்கொண்டு, வருணாசிரமப் பாகுபாட்டின் சூத்திரப் பட்டத்தைப் பெற்ற அனார்யப் பழங்குடிகளையும், அவர்களுடன் முரண்படும் சம்புகனையும் ஆரியக்காலனியத்தின் அந்நியமாதலுக்கு ஆட்பட்ட தன்னிலைகளாக இனங்காணலாம். அனார்யர்களை ஆரியர்களாக்கும் ஹிரண்யகர்ப்பத்தைப் புதிய ஆரியப்பிறப்பு என்றே பனுவல் குறிப்பிடுகிறது. அவர்களது அனார்யத்தாயின் கருப்பையின் இரத்தம் தெறித்து, நரம்பு கிழிந்து, யோனி வழியே உடல் நோகப் பூமியில் வந்துதித்த குழந்தை அவர்களது பிறப்பை மறுத்து பழைய அடையாளங்களழிந்து ஆரியக் காலனியத்தின் இழிபிறப்பை அடைகின்றனர்.

**காலனியத் தன்னிலை உருவாக்கம்:**

'மற்றமைகள்' எனும் சொல்லாடலின்வழி தன்னை மையப்படுத்திக்கொள்வதுடன், அவற்றைக் காலனியத் தன்னிலைகளாக அடையாள நீக்கம் செய்வதிலும் காலனியம் கவனம் செலுத்துகிறது. இதனை வெள்ளைப்புராணம் (white mythology) என்று குறிப்பிடுகிறார் எழுத்தாளர் ஜமாலன். அதாவது இப்புராணங்களில் பெருங்கதையாடல்களாக தேசியம், சர்வதேசியம் என்கிற கருத்தாக்கங்கள் அதற்கானக் கற்பிதப் புவியியல்கள் உருவாக்கப்பட்டு, இவ்வுலகம் ஒரு சர்வதேசிய அமைப்பாகக் கருதப்படுவதுடன், அதனடிப்படையில் உலகளாவிய கட்டப் பஞ்சாயத்து அமைப்புகளும் உருவாக்கப்படுகின்றன என்கிறார். (மணல்வீடு இதழ் 44-45, பின்நவீன மற்றும் பின்காலனிய நிலையில் தான், பிற, தன்னிலையாதல்) இவற்றை ஐரோப்பியக் காலனியத்தின் உலகக் கூட்டமைப்புகளுக்கு மட்டுமல்லாது, ஆரியக் காலனியத்தின் பார்ப்பனிய அதிகார நிறுவனங்களுக்கும் பொருத்திக் காணலாம்.

காலனியத்தின் இந்த அந்நியமாதல் பண்பின் விளைவு காலனியத் தன்னிலைகளின் உருவாக்கமாக நீட்சியடைகின்றது. அதாவது மக்கள் தங்களது சொந்தப் பண்பாடுகளைத் தாங்களே கீழானதாகக் கருதத் துவங்குகின்றனர். "பண்பாடு என்பது பண்பாட்டு வெடிகுண்டின் விளைவு. மக்கள் தமது பெயர்கள், மொழிகள், சூழல், போராட்ட மரபு, ஒற்றுமை, சுயவலு மற்றும் தம்மீதே கொண்டுள்ள நம்பிக்கையை ஒழிப்பதாகும். அது, அவர்களது கடந்த காலத்தை எந்தச் சாதனைகளும் அற்ற களர் நிலமாகக் காண வைக்கிறது. எனவே, அதிலிருந்து தூர விலக வைக்கிறது. தம்மிடமிருந்து தொலைவில் உள்ளவற்றோடு அடையாளப்படுத்திக்கொள்ள வைக்கிறது. (அடையாள மீட்பு, 2021) எனும் கூகி வா தியாங்கோவின் கூற்று காலனிய அந்நியமாதலின் விளைவுகளைக் குறிப்பிடுவதைக் கவனிக்கலாம். ஆரிய வெள்ளையினத்தவரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் அனார்யர்கள் தங்களது உடல் நிறத்தைத் தாங்களே கீழானதாகக் கருதுவதும், ஆரியர்களின் நிறத்தை வியப்பதும் இவற்றுள் முக்கியமானதொன்றாகும். அனார்ய யுவதி ஒருத்தி சீதையைப் பற்றித் தம் கூட்டத்திடம் கூறும்போது, "ஜொலிக்கின்ற ஒரு குமரிப்பெண், பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறாள் சீதை! பொன்னாலான செண்பகப்பூவைப் போல அவளது உடல் வண்ணம் இருக்கிறது" என்பதும், பதிலுக்கு லோமஸ் என்னும் அனாரிய இளைஞன் "நானும் பார்த்திருக்கிறேன், அவளைப் பார்த்தால் நமது கூட்டத்தில் உள்ள குமரிப்பெண்கள் குரங்குகளைப் போல் தோற்றமளிக்கின்றனர்" என்று கூறுவதும் காலனிய அந்நியமாதல் பண்புகளாக உள்ளதைக் கவனிக்க முடிகிறது.

**பண்பாடும் ஏகாதிபத்தியமும்:**

ஏகாதிபத்தியத்திற்குப் பங்கம் வராமல் பார்த்துக் கொள்வதற்கும் ஏகாதிபத்திய அதிகாரத்திற்குத் தெய்வீக உரிமையை வழங்குவதற்கும் கலையும் பண்பாடுமே காரணமாக இருக்கின்றன. சையத் தன்னுடைய 'பண்பாடும் ஏகாதிபத்தியமும்' என்கிற நூலில் பண்பாட்டு அதிகாரமின்றி ஏகாதிபத்தியம் தனது கல்வி, அரசியல், பொருளாதார அதிகாரங்களை

நிலைநாட்டியிருக்க முடியாது என்கிறார். (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், 2011) வருணாசிரம அமைப்பின் உருவாக்கமும், தொழிற்பாகுபாடுகளின் திட்டமிட்ட திணிப்பும், ஆணாதிக்கமும் பண்பாட்டு விதிகள் எனும் பெயரில் வரலாற்றில் எவ்வாறு நுழைக்கப்பட்டது என்பதை ராகுல சாங்கிருத்தியாயன் போன்ற வரலாற்றாய்வாளர்கள் பலரும் தம் நூலில் எடுத்துரைத்துள்ளனர். மரபு, பண்பாடு எனும் பெயரில் அனைத்து அதிகார வடிவங்களையும் கேள்விகளற்ற விழுமியங்களாக நிலைப்படுத்தியுள்ளனர். இவற்றுள் இயற்கை, பெண்கள், பழங்குடிகள், தலித்துகள் மீது என கிட்டத்தட்ட அனைத்து ஒடுக்குமுறைகளையும் இலாவகமாக நிகழ்த்தி வருகின்றனர்.

இந்தச் சூழ்ச்சியைக் கேள்வியெழுப்பும் குரலாக சீதையின் குரல் புதினம் முழுதும் பயணித்துள்ளதைக் காணலாம். சமய வழிபாட்டு உரிமை பெண்களுக்கும், சூத்திரர்களுக்கும் மறுக்கப்பட்டு ஒரு சாராருக்கானதாக வகைப்படுத்தப்பட்டதன் பின்னணியை வெறும் ‘மரபு’ என்று கூறும் அகத்தியரின் வார்த்தையை நம்ப மறுக்கிறாள். “மரபு என்கிறீர்களே, வேதத்தின் புனிதமான சுலோகங்கள் எழுதப்பட்டபோது அந்தக் கடந்த காலத்தில் வாக் என்னும் பெண் சுலோகங்களை இயற்றவில்லையா, விஸ்வவாரா அக்னி ஹோத்திரத்தை இயற்றவில்லையா, கார்கி ஆண்களுடன் பிராமணிய விவாதங்களில் பங்கேற்கவில்லையா! பெண்களைப் படிப்படியாக ஒதுக்கிவிட்டீர்கள், சூத்திரர்களையும்; அதனால்தான் இன்று சம்புகனின் கடுந்தவம் தங்களுக்கு எரிச்சலூட்டுகிறது, எனவே தாங்கள் எனது கணவரை வன்முறையின் பாதையில் செலுத்த விரும்புகிறீர்கள்” என்று அடுக்கடுக்கான கேள்விகளால் பிராமணியக் கட்டமைப்பை நிலைகுலையச் செய்கிறாள்.

**மொழியதிகாரமும் காலனிய நீக்கச் சொல்லாடலும்:**

எந்தவொரு கருத்தாக்கமும் கொள்கையும் மொழியினூடேயே பதிய வைக்கப்படுகிறது. மொழியே மக்கள் குழுமத்தின் செயல்வடிவமாக இயங்கப்பெறுகிறது. ஆரியக் காலனியத்தின் பண்பாட்டு உருவாக்கங்கள் யாவும் புராணங்களாக தொன்மங்களாக மொழிவழியே நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அதுவே நிலையான விதிகளாகவும், உண்மைகளாகவும் மனித நனவிலியில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன எனலாம். ஃபூக்கோ குறிப்பிடுவது போல் இங்கு ”அதிகாரமே உண்மையைத் தீர்மானிக்கிறது, அதிகாரத்துக்குப் புறத்தேயான உண்மை என்று ஒன்றில்லை, உண்மைகளை உற்பத்தி செய்வதன் வழியாக அன்றி, அதிகாரத்தைச் செயல்படுத்த முடியாது.”(இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், 2011) எனில் காலனியப் பார்வையை அகற்றுவதற்கு காலனியமயப்பட்ட இவ்வுண்மைகளைப் பொருளிழக்கச் செய்ய வேண்டும்; மறு ஆக்கம் செய்ய வேண்டும், காலனிய, ஆணாதிக்கப் பொருளுரைகளால் வளர்த்தெடுக்கப்பட்ட சொற்களை மறு வரையறை செய்ய வேண்டும். அச்சொற்களை கேள்வியெழுப்ப வேண்டும். இது பின்காலனியத்தின் மிக முக்கியமான அரசியல் செயற்பாடாகும்.

சீதாயணத்தின் பிரதி நெடுகவே ஆரியக் காலனியம் கட்டமைத்த, வரையறை செய்த சொல்லாடல்கள் கேள்வியெழுப்பப்பட்டுக்கொண்டே வருவதைக் காண முடியும். குறிப்பாக கற்பு

எனும் சொல் மீது ஏற்றி வைத்திருக்கும் பெண்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் கேள்வியெழுப்பும் சீதையைக் காணலாம். பெண்ணின் அதிகபட்ச வாழ்நாள் ஊழியமே தன் கற்பைப் பாதுகாத்து வைத்திருத்தலே! அவளைச் சுற்றிய எந்தவொரு செயல்பாடுமே அவளது உடலை மையமிட்டே அமைந்திருக்கிறது. தாய்வழிச் சமூகத்தின் முந்தைய பாலுறவு முறைகளிலிருந்து மாற்றம் பெற்ற, தந்தைவழி ஆணாதிக்கச் சமூகத்தின் ஒரு கணவ மணத்தை வலியுறுத்துவதன் பொருட்டு பெண்ணுடல்மேல் திணிக்கப்பட்ட இத்தகைய கற்புநெறி, ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறாக இருப்பதன் சூழ்ச்சியை மீண்டும் மீண்டும் உடைத்தெறியும் சீதையை நாவலில் காணமுடிகிறது. “கற்பு என்பது கட்டமைக்கப்பட்ட ஒன்று, பெண்களை அடக்கி வைப்பதற்காகத் தாங்கள்தான் அதனை உருவாக்கினீர்கள். கற்பு என்பது பெண்களுக்கு எதிராக நீங்கள் பயன்படுத்தும் ஆயுதமே. கற்புத்தன்மை ஆண்களுக்குத் தேவையில்லை என்றால் எதற்காகப் பெண்களுக்கு மட்டும் அது தேவைப்படுகிறது” என்பதுடன் கற்புத்தன்மைக்கான உறுதியேற்கச் சொல்லும் இராமனிடம், “கற்புத்தன்மைக்கான உறுதியேற்று ஒட்டுமொத்த ஆரியப் பெண்களின் அழிவுக்கும் வழிவகுக்க மாட்டேன்... கற்பழிப்பு என்பதும்கூட உடல் ரீதியான ஒரு தாக்குதல் அவ்வளவே. பாதிக்கப்பட்ட பெண்ணின் உடல் அதனால் மாற்றமடைந்துவிடாது” என்று கூறுகிறாள்.

**நிறைவாக:**

ஆரியக் காலனியத்தின் பார்வையில் கட்டமைக்கப்பட்ட பண்பாட்டு விழுமியங்களை விளிம்பின் பார்வையிலிருந்து மாற்றி எழுதும் மொழியரசியலின் முக்கியச் செயல்பாட்டை சீதாயணம் முன்னெடுத்துள்ளது. பின்காலனியப் பார்வை ஐரோப்பியக் காலனியத்தின் ஆதிக்க மரபுகளை மட்டுமல்லாது தனது சொந்தப் பண்பாட்டின் ஆதிக்க மரபுகளையும் விமர்சிக்கும்போதே முழுமையான காலனிய நீக்கமென்பது உறுதிப்படும். அவ்வகையில் வருணாசிரம அமைப்பின்வழி சாதியென்னும் காலனிய அதிகாரத்தை உருவாக்கி, இம்மண்ணின் பூர்வகுடிகளை அனார்யர்களென்னும் மற்றமைகளாக்கி தன்னை மையங்கொள்ளச் செய்த பார்ப்பனிய ஒடுக்குமுறைகளை, அதன் அனைத்துத் தளங்களினின்றும் விமர்சிக்கிறது. ஸ்வயம்பிரபா எனும் பாத்திரப்படைப்பின் மூலம் ஆண்களால் வரையறுத்து எல்லை வகுக்கப்பட்டு வைத்திருந்த பெண்களின் புழங்குவெளியை மாற்றியமைத்துள்ளது. எந்தச் சீதையை இலட்சியப் பெண்ணாக உருவகித்து அந்தப் பெண்ணின் உடல்வழியே தம் பார்ப்பனிய ஆணாதிக்கக் கருத்தியல்களை எக்காலத்துக்குமான அறநெறிகளாக முன்வைக்க முயன்றனரோ, அதே சீதையைக் கொண்டே அவ்வத்தனைக் கருத்துகளையும் உடைத்து நொறுக்கியதோடு, தனக்கான இருப்பையும் முன்வைக்கும் பெண்ணாக முன்னிறுத்தியது மிகத் தந்திரமான, சிறப்பான மாற்று அரசியல் வடிவம். வேறெந்த ஆண்களின் கண்களின் வழியாகவும் பார்க்காமல் 'தம்மை எழுதுவது' எனும் தன்மையின் அடிப்படையில் விளிம்பின் குரலாக ஒலிக்கும் இப்புதினத்தைச் சீதையின் அயணமாகப் பிரதியாக்கம் செய்ததே பின்காலனியப் பெயரிடும் அரசியலின் வெற்றியெனலாம். காலனிய மொழிசார் சொல்லாடல்களையும், மறைக்கப்பட்ட உண்மைகளையும், இலக்கின் பரப்பு எது,

எத்தகைய அரசியலை முன்னெடுக்கிறோம் என்பதான பிரதியின் பௌதீகத் தன்மையையும் உணர்ந்து, செயல்வடிவம் பெற்ற எதிர்க்கதையாடல்களின் பிரதியாக சீதாயணம் அமையப்பெற்றுள்ளது.

**துணைநின்ற நூல்கள்:**


1. இரத்தினக்குமார், ந, 2016, திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும், கயல் கவின் பதிப்பகம், சென்னை.
2. காமராசு.இரா (தொ.ஆ.)., 2018, தமிழ் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள், சாகித்திய அகாதெமி வெளியீடு, புதுதில்லி.
3. கூகி வா தியாங்கோ, அ.மங்கை (மொ.ஆ.)., 2021, அடையாள மீட்பு காலனிய ஓர்மை அகற்றல்- ஆப்பிரிக்க இலக்கிய மொழி அரசியல், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி.
4. நடராஜன்.தி.சு, க.பஞ்சாங்கம் (மொ.ஆ.), 2014, தமிழில் திறனாய்வுப் பனுவல்கள், சாகித்திய அகாதெமி வெளியீடு, புதுதில்லி.
5. பஞ்சாங்கம்.க., 2011, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.
6. மல்லிகா சென்குப்தா, ஞா.சத்தீஸ்வரன் (மொ.ஆ.), 2023, சீதாயணம், அணங்கு பெண்ணியப் பதிப்பகம், சென்னை.
7. ராபர்ட் ஜே.சி. யங், அ.மங்கை (மொ.ஆ.), 2007, பின்காலனியம் மிகச் சுருக்கமான அறிமுகம், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.